

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்

# பரிசளிப்பு விழா-2018

29.11.2018

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது தம்பி
தங்கையரின்
பரிசளிப்பு விழா
நிகழ்வு
சிறப்புற
வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்
புலம்பெயர்
பழைய மாணவ உறவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூர நோக்கு!

**ஒளிமயமான வாழ்விற்கு**
**தரமான அடிப்படைக் கல்வி**

# பணிக்கூற்று

பூகோள ரீதியாக சவால்களுக்கு முகங்கொடுக்கக் கூடிய புத்தாக்கங்களை உருவாக்கும் பொருத்தப்பாடுடைய சமநிலை ஆளுமையுள்ள செயற்றிறன் மிக்க பண்பு சார் நற்பிரஜைகளை சமூகத்துக்களித்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
## பாடசாலைக் கீதம்

வாழிய வாழிய வாழியவே
வளமான வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்
(வாழிய)

அன்னை தந்தையின் ஆதரவின் பின்
ஆரம்பக் கல்விக்கு அடி எடுத்து வைத்த
சின்ன மழலைகளின் கல்விக்கு வித்திட்ட
சிறந்த நல்ல வித்தியாலயமே
(வாழிய.....)

எண்ணும் எழுத்தும் இசையுடன் கற்று
எழில் தரும் சுற்றாடற் கல்வியுடனே
சமய ஒழுக்கம் ஆங்கிலத்தோடு
ஆக்கமும் ஊக்கமும் கற்றுவளம் பெற
(வாழிய.....)

வனப்புறு நெல்வள களனியும் சூழ
தண்புனல் அருவி மருங்கினில் பாய
கவின்பெறு கலைகள் அழகுடன் மிளிர
வாழ்க நம் கலைக்கூடம் வளர்க இதன் பணி
(வாழிய......)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின்
## வருடாந்த பரிசளிப்பு விழா – 2018

### அதிபர் அறிக்கை

எமது பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவிற்கு முதன்மை விருந்தினராக கலந்து எம்மை பெருமைப்படுத்திக் கொண்டிருக்கும் வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் மதிப்பிற்குரிய திரு.சிவலிங்கம் சத்தியசீலன் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து எம்மை மகிழ்வித்து கொண்டிருக்கும் கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. தி.ஜோண்குயின்ரஸ் அவர்களே, கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டு எம் கடந்தகால நினைவுகளை மீட்ட வாய்ப்பளித்துக் கொண்டிருக்கும் பழையமாணவனும் கிளி/ இந்துக்கல்லூரி முதல்வருமான திரு. கி.விக்னராஜா அவர்களே நலன் விரும்பிகளே பெற்றோர்களே SDC செயலாளர் மற்றும் உறுப்பினர்களே, எந்த ஒரு செயற்பாட்டிற்கும் எமக்கு உறுதுணையாக நின்று தோள் கொடுக்கும் பழையமாணவர்களே! எமது கல்வி திணைக்கள உத்தியோகத்தர்களே அயற்பாடசாலை அதிபர்களே ஆசிரியர்களே எமது பாடசாலை பிரதி அதிபர் அவர்களே, ஆசிரியர்களே கல்விசாரா ஊழியர்களே எங்கள் எஜமானக்களான அன்பிற்கினிய மாணவச் செல்வங்களே அனைவருக்கும் எனது அன்பான மாலை வணக்கங்கள் உரித்தாகுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயத்தின் வரலாற்றில் மூன்றாவது பரிசில் நாளில் நாம் இங்கு கூடியுள்ளோம். இந் நாள் எம் எல்லோருக்கும் இனிய நாள் எம் வாழ்வில் மறக்க முடியாத ஒரு பொன் நாள் தமது திறமைகளைக் காண்பித்தவர்களும் காண்பிக்க துடிப்பவர்களும் அங்கீகாரம் பெறும் ஒரு நன் நாள் இந் நாளில் கடந்த இரண்டு ஆண்டுகளிலும் நாம் மிக நேர்த்தியாக செய்து முடித்த அந்த பரிசில் நாட்களை மனதில் கொள்கின்றேன்.

கிளிநொச்சியின் வளம் கொளிக்கும் ஊர்களில் வட்டக்கச்சி முதன்மையானது வடக்கின் மிகப்பெரும் நீர்த் தேக்கமான இரணைமடுவின் வலது கரையில் தோன்றி இரணைமடுவால் வளம் பெறும் ஊராக வட்டக்கச்சி மிளிர்கின்றது இரணைமடுவின் குளிர்ச்சி எம்மை வளப்படுத்துவதாகவும், அதன் வரட்சி எம்மை வாட்டி எடுப்பதாகவும் அமைகிறது என்றால் அது மிகையில்லை. 1953 இல் ஆரம்பிக்கப்பட்ட வட்டக்கச்சி குடியேற்றத்தில் 1954 இல் யா/வட்டக்கச்சி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை என்ற பெயரில் கல்விச் சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. இதுவே எமது மூலாதாரமாகும். இதன் பின்னர் 06.05.1980 இல் யா/வட்டக்கச்சி மகாவித்தியாலயமாக இக் கல்விச் சாலை தரம் உயர்ந்து 1- 13 வரையான வகுப்புக்களுடன் இயங்கி வந்தது 2012 இல் 1000 இடை நிலை பாடசாலை அபிவிருத்தித் திட்டத்தில் 1-5 வரையான வகுப்புக்கள் வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம் என்னும் பெயரில் தனியாகப் பிரிக்கப்பட்டு வட்டக்கச்சி மகா வித்தியாலய வளாகத்திலேயே இயங்கி வந்தது. இக் காலப்பகுதியில் இப் பாடசாலையில் முதல் அதிபராக திரு. த. தருமராஜா பொறுப்பேற்றுக் கொண்டார்.

16.01.2015 அன்று இந்தக் காணியில் எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. மிக வளம் மிக்க பாடசாலையுடன் இணைந்திருந்த இப் பாடசாலை தனியாகப் பிரிக்கப்பட்ட போது தளபாடங்களுடன் மட்டும் நெற்களஞ்சியங்களில் இயங்கும் நிலை உருவானது. ஆயினும் தனியான ஒரு இடத்தில் இந்தப் பாடசாலையை இயக்க அன்று எடுக்கப்பட்ட முயற்சி போற்றுதற்குரியது. அந்த நேரத்தில் இச் செயற்பாட்டிற்காக உழைத்த அத்தனை நல்லுள்ளங்களையும் நினைவில் கொள்கின்றோம்.

2016 இல் இருந்து எமது பௌதீக வளம் மெல்ல மெல்ல பெருகத் தொடங்கியது. எமது முதலாவது நிரந்தரக் வகுப்பறைக் கட்டம் (110x25') 04.04.2016 அன்று அத்திவாரம் இடப்பட்டு 16.06.2016 அன்று திறந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைக்கப்பட்டது. *04.05.2016* அன்று *70* x *25'* இருமாடி கொண்ட நூலகம், கணினி அறை வகுப்பறைகளுக்கான கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டு *02.02.2017* அன்று திறந்து வைக்கப்பட்டது. இந்தக் காலப்பகுதிக்குள் எமது மாணவர்களுக்கு தேவையான சிறுவர் விளையாட்டு முற்றம், மலசல கூடங்கள் ஏனைய அடிப்படை விடயங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.

எமது கிராமத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்னும் எண்ணத்திலுள்ள புலம் பெயர் பழை மாணவர்களின் சிந்தனையில் எமது பாடசாலை வளங்கள் பெருகத் தொடங்கின. முன்பக்க அழகிய மதிலும் நுழைவாசல் கேற் என்பனவும் பிரான்ஸ் ஒன்றிய பழைய மாணவர்களால் அமைத்துத்தரப்பட்டது.

இது எமது பாடசாலைக்கு மிடுக்கினையும் அழகினையும், வீதியால் செல்வோர் எமது கல்விச் சாலையை திரும்பிப்பார்க்கும் நிலையினையும் ஏற்படுத்தியது. பாடசாலைக்குள் நுழைந்ததும் மனச் சாந்தியையும் நிறைவையும் தரும் வகையில் கருணையுடன் எம்மை வரவேற்று ஆசீர்வதிக்கும் கல்வித்தாய் சரஸ்வதியின் சிலையை எமது பழைய மாணவர்கள் சார்பில் திரு க. கோபாலசிங்கம் குடும்பத்தினர் அமைத்துத் தந்தனர்.

*27.09.2017* இல் எமது பாடசாலையில் கல்வி வரலாற்றிலும் மாவட்டத்தின் கல்வி வரலாற்றிலும் புதிய அத்தியாயம் ஒன்றினைத் திறந்து வைத்தோம். வகுப்பறையில் கற்றலுக்காகவும் கற்பித்தலுக்காவும் " Smart board " பயன்படுத்தும் நிலையை உருவாக்கினோம் இதற்காக எமது பழைய மாணவர்கள் பெரிதும் துணை நின்றனர். திருமதி.ப.சிவநிதி, திருமதி .வி. கோமளா , திருமதி. சு. சுகுணா, திருமதி.பாமினி கோகுலன், திரு. தி.நவநீதராசா ஆகியோரும் சர்வதேச சுகாதார மருத்துவ நல மையமும் (IMHO) எமக்காக Smart Class Room களை அமைத்து தந்தனர் தற்போது *6* smart வகுப்பறைகள் எம்மிடம் இயங்குகின்றன. ஏழாவது வகுப்பறையையும் அமைக்கவுள்ளளோம்.

*11.05.2018* அன்று கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் மற்றுமொரு நவீனத்துவம் எமது பாடசாலையில் நடந்தேறியது. வகுப்பறைகளில் smart board உடன் Tab let கணினிகளை உபயோகிக்கும் செயற்பாடுகளை ஆரம்பித்தோம் இதற்காக எமது பழைய மாணவன் வேலாயுதம் நகுலாநந்தன் அவர்கள் *20* Tab let கணினிகளை அன்பளிப்பாக வழங்கினார். எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலையின் தரம் -2 மாணவர்கள் தற்போது இந்தக் கணினிகளை உபயோகித்து வருகின்றனர்.

21 ம் நூற்றாண்டின் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு ஏற்ப எமது சிறிய மாணவர்களையும் வளர்த்துச் செல்ல வேண்டும் என்பது எனது கனவாகும். அந்தக் கனவை மெல்ல மெல்ல நிதானமாக வளர்த்துக் செல்கிறோம். எமது மாணவர்கள் அனைவருக்கும் சீரான கணினிக் கல்வி நாளாந்தம் வழங்கப்படுகிறது. எமது ஆளணியில் கணினி ஆசிரியர் இல்லாத போதும் ஒருவரை நியமித்து சீரான கணினி வகுப்பை நடாத்தி வருகிறோம். இந்த ஆசிரியருக்கான சம்பளத்தை கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக பெற்றோர்களே வழங்கி வந்த நிலையில் இந்த வருடம் பழைய மாணவன் நகுலாநந்தன் வழங்கி வந்தார். தற்போது கடந்த இரண்டு மாதங்களாக SJC 87 Initiative அமைப்பினர் வழங்கி வருவதுடன் இனிவரும் காலங்களில் தொடர்ந்து இந்த ஆசிரியருக்கான சம்பளத்தை வழங்க உறுதியளித்துள்ளனர். தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையை எழுதிய மாணவர்களுக்கு கடந்த இரண்டு ஆண்டுகளாக KIDS Computer Course என்னும் மூன்று மாத பயிற்சியை நடாத்தி வருகிறோம். எமது கணினி கூடத்தின் கணினிகளை அதிகரிக்க வட்டக்கச்சி மத்திய கல்லூரி அதிபர் வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியுடன் 10 கணினிகளை வழங்கினார். Care for Education (USA) 13 மடிக் கணினிகளை வழங்கியதுடன் உள்ளக வலையமைப்பு வசதிகளையும் செய்து வழங்கினர். எமது கணினி கூடத்திற்காக 20 கணினி மேசைகளையும், கதிரைகளையும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அவர்கள் புலம் பெயர் உறவான கோபாலசிங்கம் அவர்கள் மூலமாகப் பெற்றுத் தந்தார். இதனால் வளமான கணினி கூடம் உருவாயிற்று. எமது மாணவர்களுக்கு மட்டுமன்றி ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கும் நிலையமாக எமது கணினி கூடம் மாற்றப்பட்டுள்ளது. 100 இற்கும் மேற்பட்ட எமது வலய ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறியுள்ளனர் இந்த வசதிகளை ஏற்படுத்தி தந்த அனைவருக்கும் மனம் நிறைந்த நன்றிகள்

இரண்டாம் மொழி சிங்கள பாடத்திற்கான ஆசிரியர் கடந்த மூன்று வருடமாக தொடர்ச்சியாக கற்பித்து வருகிறார். இருவருக்கான சம்பளம் ஆரம்பத்தில் பெற்றோர்களால் வழங்கப்பட்டாலும் இந்த வருடம் எமது பழைய மாணவி சுகுணா சுதாகரன் அவர்களால் வழங்கப்படுவது குறிப்பிட்டு கூறக்கூடியதாகும். கடந்த இரண்டு ஆண்டுகளாக கத்தோலிக்க பாடத்திற்கான ஆசிரியர் கற்பித்து வருகிறார். இவருக்கான சம்பளத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் எமது பங்குத் தந்தை கனிஸ்லியஸ்ராஜ் அவர்கள் ஒழுங்குப்படுத்தி வழங்கினார் தற்போது எமது பங்குத் தந்தை பிறையன் அவர்கள் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

**" கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும்"**

என்ற இறைமொழிக்கு அமைவாக எங்கள் தேவைகளை எப்பொழுதும் நாம் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். எல்லோருடைய உணர்வுகளையும் எமது கல்விக் கூடத்திற்காக ஒன்று சேர்த்து தட்டினோம். கதவுகள் திறக்கப்பட எமது பாடசாலை வளமாக்கப்படுகின்றது. கடும் காற்றினால் எங்கள் தகர வேலிகள் தூக்கி எறியப்பட்ட போது அனர்த்த முகாமைத்துவ பிரிவில் சென்று வேண்டுகை ஒன்றை விடுத்தேன் "எங்கள் வளாகத்தை பாதுகாக்க உதவுங்கள் என்று" தனி மனிதர்களுக்கென்றால் அனர்த்தத்திற்கு உதவலாம் பொது இடங்களுக்கு உதவ முடியாது என்றனர். SJC 87 Initiative உதவ முன்வந்தனர். கமக்கார அமைப்புக்களுக்கூடாக எமது பிரதேச மக்கள் உடல் உழைப்பை வழங்கினர், பாதுகாப்பான வேலி உருவாக்கப்பட்டுள்ளது.

எமது பாடசாலை மாணவரிடையே ஒரு பாண்ட் அணியினரை உருவாக்க வேண்டும் என்பதற்கான முயற்சியில் ஈடுபட்ட போது எமக்கு தேவையான பாண்ட் வாத்தியங்களை எமது VCC யின் 93 (O/L) - 96 (A/L) பழைய மாணவர் அணியில் புலம் பெயர் நாடுகளில் வாழ்வோர் அதற்கான அனுசரணையை வழங்கினர். இதே அணியை சேர்ந்த உள்ளூரில் வாழ்வோர் இவர்களுக்கான சீருடையை வழங்கினர். அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இவர்களுக்கான பயிற்சிகளை வழங்கிய கிளி நீர்ப்பாசன திணைக்கள உத்தியோகத்தரான பெர்னாண்டோவுக்கு எமது மனமார்ந்த நன்றிகள்.

அன்புக்குரிய பெற்றோர்களே நல் வாழ்வுக்கான அடிப்படை கல்வி ஆகும். இதனை எமது பிள்ளைகளுக்கு வழங்கவேண்டியது உங்களதும் எங்களதும் கடமையாகும். நாங்கள் எமது மாணவர்களுக்கான அனைத்து வளங்களையும் தேடி எமது பாடசாலையின் ஆரம்பக் கல்வியின் முதல் தர பாடசாலையாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டு அந்த இலக்கினை எட்டி வருகிறோம். ஆயினும் பெற்றோர்கள் உங்கள் பிள்ளை மீதான கல்வி தொடர்பான அக்கறையை இன்னும் செலுத்த வேண்டியது அவசியமாகின்றது. ஆரம்பக் கல்வி தனியே பாடசாலையுடன் முடிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுவதில்லை வீட்டிலும் தொடர்ச்சியான கவனிப்பும், கண்காணிப்பும் அவசியமானது. வீட்டில் இது நிகழாத போது பிள்ளையின் கல்வியில் வீழ்ச்சி ஏற்படுவதை தவிர்க்க முடியாது. எமது பாடசாலையிலும் இவ்வாறான சூழ்நிலை ஒரு சில பெற்றோர் மத்தியில் இருப்பது வேதனை தருகிறது பிள்ளைகளுக்கு ஒளிமயமான சுபீட்சமான எதிர்காலத்தை வழங்க நீங்கள் அனைவரும் எங்களுடன் கைகோர்த்துக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த இரு வாரங்களின் முன்னர் நடந்த ஒரு சம்பவத்தை பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். தரம் ஒன்றில் கற்கும் ஒரு மாணவரை ஆசிரியர் ஒருவர் அழைத்து வந்தார். "அந்த மாணவனது கதையை கேளுங்கள் என்றார்" அப்போது அந்த மாணவன் சொன்னான் எங்கள் வீட்டில் இன்று சமைப்பதற்கு ஒன்றும் இல்லை அம்மாவிடம் சாப்பாடு கேட்டேன் அம்மா சொன்னார் அதிபரிடம் போய் கேள் அவர் தருவார் என்று இந்தச் சம்பவம் எனது மனதை மிகவும் பாதித்ததுடன் இந்தச் சமூகம் எமது பாடசாலை மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் வெளிப்படுத்தியது . ஒரு பாடசாலை கற்றல் கற்பித்தல் பணிகளுடன் சமூகத்திற்கு பணி புரியும் நிறுவனமாக இருக்க வேண்டும். அப்போது தான் அந்த கல்விச் சாலை தனது இலக்கினை அடைய முடியும்.

ஆரம்பப்பாடசாலை ஒன்றின் உயரிய பணியாக கல்வியுடன் மாணவர்களுக்கு சீரிய ஒழுக்க விழுமியங்கள், பண்பாடுகள் பழக்க வழக்கங்கள் தேச வழமைகளை கற்றுக் கொடுப்பதுடன், தரம் -5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஒரு உயர் நிலையை எட்டுவதையும் குறிப்பிட்டு கூறிக் கொள்ள முடியும். அந்த வகையில் இவ்வருடம் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையின் வெற்றிக்காக கடுமையான உழைப்பினை எமது நிர்வாகம், ஆசிரியர்கள், பெற்றோர்கள், நலன் விரும்பிகள் வழங்கினர் இதன் காரணமாக 97% சித்தியை எம்மால் பெற முடிந்தது. 10 மாணவரை வெட்டுப்புள்ளிக்கு மேல் சித்தி பெற வைக்க முடிந்தது. எம் எல்லோரது உழைப்பும் சித்தி வீதம் வருடாந்தம் அதிகரித்துச் செல்ல காரணமாயிற்று இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் எனது நன்றியும் பாராட்டும் உரித்தாகுக. குறிப்பாக இவ்வருடம் தரம் - 5 மாணவர்களுக்கு வகுப்பாசிரியர்களாக இருந்து பணியாற்றிய ஆசிரியர்களான திருமதி சரஸ்வதி ஜெயக்குமார், திருமதி தர்சினி யோகேஸ்வரன் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள் தமது சொந்த தேவைகள், தமது பிள்ளைகளின் தேவைகளை ஒதுக்கி வைத்து விட்டு எம் பள்ளி பிள்ளைகளுக்காக இரவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகலாக பணியாற்றியமையை நினைவிற் கொள்கின்றேன். இந்த செயற்பாட்டிற்காக பங்காற்றிய எமது ஆசிரியர்கள் அனைவருக்கும் எனது நன்றிகள்.

எமது பாடசாலையில் மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வகையிலும், பாரம்பரிய விளையாட்டுக்களை வளர்த்தெடுக்கும் நோக்கிலும் இவ்வருடம் தாச்சி ( கிளித்தட்டு ) சுற்றுப்போட்டி ஒன்றை வட்டக்கச்சி வட்டகை பாடசாலைகளுக்கிடையில் நடாத்தி பெறுமதியான பரிசில்களை வழங்கினோம், அமரர் விஜயமனோகரன் நினைவாக இந்த போட்டிகளை வருடா வருடம் நடாத்த ஏற்பாடு செய்துள்ளோம். அத்துடன் திருக்குறள் மனனம், திருக்குறள் ஓதுதல் போட்டிகளையும் தொடர்ந்து நடாத்த ஏற்பாடுகளை செய்துள்ளோம். இதற்கான அனுசரணையை வழங்க சுவிஸ்லதந்தின் பேண் வள்ளுவன் பாடசாலை இயக்குனர் நந்தினி முருகவேல் இணையர் முன்வந்துள்ளனர். அத்துடன் உதைபந்தாட்டப் பயிற்சியை வாராந்தம் நடாத்தி வருகிறோம் இதற்கான அனுசரணை யை விளையாட்டு உத்தியோகத்தர் ஜெயக்குமார் வழங்கி வருகிறார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றிகள், எமது வட்டக்கச்சி வட்டகை தரம் -5 மாணவர்களிடையே உதைபந்தாட்டப் போட்டியை நடாத்த ஏற்பாடுகளை செய்துள்ளோம்.

மதிப்புக்குரிய வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்களே எமது பாடசாலைக்கு தாங்கள் மானசீகமாக ஆற்றிவரும் பங்களிப்பு எம்மை உத்வேகத்துடன் பணியாற்ற தூண்டுகிறது. தாங்களின் எதிர்பார்ப்பினை எமது பாடசாலை ஓரளவேனும் பூர்த்தி செய்து வருகிறது என நாம் நம்புகின்றோம். எமது தேவைகள் பற்றி தாங்கள் கரிசனை கொள்வீர்கள் என்பது எமது நம்பிக்கையாகும். தங்களின் கரிசனை மேலும் எம்மை வளப்படுத்தும் என்பது எமது அசையாத நம்பிக்கையாகும்.

மதிப்பிற்குரிய செயலாளர் அவர்களே எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவுக்கு வருகை தந்து எமது பாடசாலை சமூகத்தை பெருமைப்படுத்தியமைக்கு எமது மனமார்ந்த நன்றிகள். தங்களின் வருகையால் நாம் உவகை கொள்கிறோம். தங்களின் வருகை எமது பாடசாலைக்கு வளம் சேர்க்கும் என உறுதியாக நம்புகிறோம், எமது மாணவர்கள் Smart class இல் படித்தாலும், வசதிமிக்க வகுப்பறைகளில் இருந்தாலும் சில மாணவர்கள் இன்னும் தகர கொட்டகையிலேயே கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கின்றனர், மழை, வெயில், குரங்குகளின் சேட்டை என்பனவற்றுக்கு முகம் கொடுத்தே அந்த மாணவர்கள் கற்க வேண்டியுள்ளது. எமக்கு 130X25 அடி இரு மாடிக்கட்டடம் ஒன்று அமைப்பதன் மூலம் எமது கட்டட தேவைகள் பூர்த்தி செய்யப்படும், ஒரு கட்டடத்தை பெற பலர் முயன்ற போதும் அது கை கூடவில்லை எமது வேண்டுகையின் பெயரில் வலயக்கல்வி பணிப்பாளர், எமது பிரதேச பாராளுமன்ற உறுப்பினர் ஆகியோரின் முயற்சியில் 2 கோடி ரூபாவுக்கு மாடிக்கட்டடம் ஒன்றுக்கான வாய்ப்புக் கிடைத்தும் மாகாண மத்திய அரசுகளின் தற்போதைய நிலையால் அந்தக் கட்டட அமைப்பு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எமது தேவைக்குரிய கட்டடத்தினை அமைத்துத்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என தயவாக தங்களை கேட்டுக் கொள்கிறேன்.

அன்புக்குரிய ஆசிரியர்களே எங்களின் கூட்டுழைப்பு கடந்த மூன்று வருட காலத்திற்குள் எமது பாடசாலையில் பல்வேறு முன்னேற்றகரமான மாற்றங்களைத் தந்துள்ளது கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் வெற்றிகளை கண்டுள்ளதுடன் பௌதீக வளரீதியான மாற்றங்களையும் ஏற்படுத்தினோம். எமது மாணவர்கள் சகல ஆற்றல்களையும் கொண்டவர்களாக மிளிர வேண்டும் என்பதற்காக உங்கள் பணிக்கும் அப்பால் நீங்கள் கொடுக்கும் ஆதரவிற்கு மனமார்ந்த நன்றிகள் இச் செயற்பாடு மேலும் உத்வேகத்துடன் நிகழ வேண்டும் என்பது காலத்தின் தேவையாகும்.

தங்களின் கற்பித்தல் திறனாலும் உயரிய பங்கெடுக்கும் ஆற்றலாலும் எமது பாடசாலைக்கு வருகை தந்திருந்த கல்வி அமைச்சின் செயலாளர் சுனில் கெட்டியாராச்சி அவர்கள் பாடசாலையின் செயற்பாடுகளை பார்வையிட்டு உடனடியாகவே பத்து இலட்சம் ரூபாவினை வழங்குவதாகவும் மீதமாகவுள்ள வகுப்புக்களையும் Smart வகுப்புக்களாக மாற்று மாறும் தெரிவித்ததுடன் வெளிநாட்டுப் பயிற்சிக்கான வாய்ப்பொன்றை எனக்கு வழங்கினார். அதன் பிரகாரம் 2018 அக்டோபர் 15 தொடக்கம் நவம்பர் 04 வரையான 21 நாட்கள் சீனாவில் நடைபெற்ற கல்வியியலாளர்களுக்கான செயலமர்வு ஒன்றில் பங்கெடுக்கும் வாய்ப்பொன்று எனக்குக் கிடைத்தது எமது ஆசிரியர்கள், எமது பாடசாலை, எமது சமூகம், எமது வலயம், எமது மாகாணம் சார்பாக நான் அச் செயலமர்வில் பங்கு கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை சார்பில் 9 பேர் கலந்து கொண்ட போதும் தமிழர் சார்பில் ஒருவனாக நான் கலந்து கொண்டது எனக்கு நிறைவைத் தந்தது 17 நாடுகளைச் சேர்ந்த 53 பேர் இச் செயலமர்வில் கலந்து கொண்டோம். இங்கு பெற்றுக் கொண்ட அனுபவங்களை எமது மாணவர்களுக்கு பயன்பாடுடையதாக நிச்சயம் உருவாக்குவோம். இந்த வாய்ப்பு எனக்கு கிடைக்க காரணமான வலயக் கல்விப் பணிப்பாளர் செயலாளர் ஆகியோருக்கு எமது சமூகம் சார்ந்த நன்றிகள்.

நிறைவாக இந்தப் பரிசில் நாள் சிறப்பாக நடைபெற அனுசரணை வழங்கிய பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் நிகழ்வில் கலந்து கொண்டு எம்மை பெருமைப்படுத்திய வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர், வலயக்கல்வி பணிப்பாளர் பழைய மாணவர்கள் எமது பெற்றோர்கள் சமூகத்தார் அனைவருக்கும் நன்றிகள்.

அன்பான மாணவர்களே எமது பாடசாலையில் உள்ள மொத்த மாணவர்களின் 65% மேற்பட்டோர் உங்கள் திறமைகளுக்காக பரிசில்களையும் பாராட்டினையும் பெற்றுள்ளீர்கள் இந்த நிலை அடுத்த ஆண்டில் பெருக வேண்டும்.

பரிசில் பெறும் வாய்ப்பினை பெறாத மாணவர்கள் அடுத்த ஆண்டில் அந்த இலக்கினை அடைய வேண்டும். பரிசில் பெற்றவர்கள் அந்த நிலையினை நீங்கள் தக்க வைத்துக் கொள்ள வேண்டும் எமது தேசத்தின் முதன்மை மாணவர்களாக நீங்கள் திகழ வேண்டும் என வாழ்த்துகிறேன்.

அன்புக்குரியவர்களே, எழுச்சிமிகு, நாகரீகமான கல்விச் சமூகம் ஒன்றை கட்டியெழுப்ப தங்கள் அனைவரதும் ஆதரவினை எதிர்பார்த்து உங்கள் கரங்களை இறுகப்பற்றி விடைபெறுகின்றேன்.

நன்றிகள்

***அ. பங்கையற்செல்வன்***
***அதிபர்***
***கிளி/வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலயம்***
***2018.11.29***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

**தரம் – I**

| தொ. இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | லோகேஸ்வரன் ரிசோபன் | 1 |
| 2 | சிறீதரன் கேசவி | 2 |
| 3 | பிறேமராஜா டிஸ்ணா | 3 |
| 4 | பத்மகாந்தன் தரணிகன் | 4 |
| 5 | சசிகரன் உமாருதிகா | 5 |
| 6 | அரவிந்தன் அபிஷன் | 6 |
| 7 | சிவகுமார் அக்ஷயா | 7 |
| 8 | ஜீவகுமார் நவீனன் | 8 |
| 9 | ஜெயராஜிதன் கார்ணிஹா | 9 |
| 10 | உதயரகுவர்மா பதுர்ஷன் | 10 |
| 11 | உத்மஉதிஷ்ரன் சபிசாரஜினி | 11 |
| 12 | இளையசுந்தரம் தனுசனா | 12 |
| 13 | கமலறாஜ் சரண்ஜன் | 13 |
| 14 | குணாகரன் டக்ஷஜா | 14 |
| 15 | ஜெகதீபன் கஜீவன் | 15 |
| 16 | தேவகுமார் கவிசாளன் | 16 |
| 17 | நிரஞ்சன் தஸ்மி | 17 |
| 18 | பிறேம்குமார் சாகித்தியன் | 18 |
| 19 | அன்ரன் மகிந்தன் பிரமினா | 19 |
| 20 | பிரதீபன் அபிநாஸ் | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

**தரம் – 2**

| தொ. இல | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | சுகந்தன் கம்சிகன் | 1 |
| 2 | ஜெயக்குமார் தக்சனா | 2 |
| 3 | யூட்வில் பிரட் அபிநிஷன் | 3 |
| 4 | மதனராஜ் கவின் | 4 |
| 5 | சண்முகநாதன் விபிஷா | 5 |
| 6 | கோபிகரன் நிக்சிகா | 6 |
| 7 | கலைச்செல்வன் சுஜீதன் | 7 |
| 8 | குணாகரன் திகானி | 8 |
| 9 | சிவகுமார் கேனுஜன் | 9 |
| 10 | மதிரூபன் மேரியஸ்மிதா | 10 |
| 11 | கணேஷ் விதுஷா | 11 |
| 12 | றதீஸ்குமார் சமயுக்தன் | 12 |
| 13 | மாதவரூபன் கலைமதி | 13 |
| 14 | கோகிலன் இன்பரசன் | 14 |
| 15 | குகபாலன் தட்சயன் | 15 |
| 16 | பிரதீக்குமார் புகழ்நிலா | 16 |
| 17 | அரவிந்தன் நயனிகா | 17 |
| 18 | சிவகுமார் பவிசன் | 18 |
| 19 | விஜேந்திரன் விதுஷா | 19 |
| 20 | கணேஸ்வரன் சியாந்தி | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பாசிரியருடன் தரம் 1-A மாணவர்கள்



வகுப்பாசிரியருடன் தரம் 1-B மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பாசிரியருடன் தரம் 2-A மாணவர்கள்



வகுப்பாசிரியருடன் தரம் 2-B மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

**தரம் – 3**

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | ஜெயக்குமார் கபிசன் | 1 |
| 2 | சுதர்சன் அபிசேக் | 2 |
| 3 | நந்திவர்மா அபர்சிகா | 3 |
| 4 | கிருபாலன் புருசோத் | 4 |
| 5 | சத்தியசீலன் ஹரபிஷன் | 5 |
| 6 | யூட்வில்பரட் அக்ஷ்யன் | 6 |
| 7 | சிவநாதன் சபரிகரன் | 7 |
| 8 | சிவனேசன் பிரணவி | 8 |
| 9 | ஜெகன் கோபிக்சன் | 9 |
| 10 | சாந்தரூபன் சாணுஜா | 10 |
| 11 | அன்ரன்யூட்ஸ் பிருந்தா | 11 |
| 12 | பார்த்தீபவர்ணன் டினோஜன் | 12 |
| 13 | ராஜ்குமார் கபிசன் | 13 |
| 14 | சசிக்குமார் தர்விசன் | 14 |
| 15 | புஸ்பகரன் திரிஷா | 15 |
| 16 | சதீஸ்ரமணன் இகிந்துசானி | 16 |
| 17 | ரஜீவன் அனித்தா | 17 |
| 18 | சதானந்தம் சாணுஷா | 18 |
| 19 | சிவகுமார் தரண்யன் | 19 |
| 20 | சுந்தரராசன் அபிநயா | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

தரம் – 4

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | ஜெயகாந் ஆரணி | 1 |
| 2 | துரைலிங்கம் தர்சிகா | 2 |
| 3 | மாதவரூபன் தாருமதி | 3 |
| 4 | கோணேஸ் துஷாளினி | 4 |
| 5 | சிவறாஜா தனுசிகன் | 5 |
| 6 | சக்திவேல் சனுசிகா | 6 |
| 7 | தர்மகுமார சூரியாஸ் தர்மிகா | 7 |
| 8 | றதீஸ்க்குமார் துருவிந்தன் | 8 |
| 9 | நகுலேஸ்வரன் அனுரதன் | 9 |
| 10 | செல்வரூபன் திரிசாளினி | 10 |
| 11 | குணசேகரம் டனுசிகன் | 11 |
| 12 | இராசகுலன் மரூஜா | 12 |
| 13 | ஜெகதீஸ்வரன் பிரமிலன் | 13 |
| 14 | கருணாகரன் லக்ஸ்மிகா | 14 |
| 15 | நேசன் தேனுசா | 15 |
| 16 | வசந்தன் வபிசன் | 16 |
| 17 | சிறீதரன் ரேணுஜா | 17 |
| 18 | சுதர்சன் தஸ்மிகா | 18 |
| 19 | பிரதீப்குமார் சுவர்ணன் | 19 |
| 20 | தேவசீலன் பிரவீனா | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகுப்பாசிரியருடன் தரம் 3-A மாணவர்கள்



வகுப்பாசிரியருடன் தரம் 3-B மாணவர்கள்



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பாசிரியருடன் தரம் 4-A மாணவர்கள்



## வகுப்பாசிரியருடன் தரம் 4-B மாணவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழாவில் பரிசு பெறும் மாணவர் விபரம்

தரம் – 5

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | பிறேம்குமார் கனியிசை | 1 |
| 2 | குகபாலன் சுபேசனா | 2 |
| 3 | ஜெயரூபன் அட்சரா | 3 |
| 4 | இரத்தினசிங்கம் ஜென்சிகா | 3 |
| 5 | லோகேஸ்வரன் சாதுரியன் | 5 |
| 6 | பிரபாகரன் சாதுரி | 6 |
| 7 | ஸ்ரீரங்கநாதன் மதுரிகா | 7 |
| 8 | குணாகரன் லக்சவி | 8 |
| 9 | அருள்ராசா அபிசன் | 9 |
| 10 | சிவகுமார் பிரணுஜன் | 10 |
| 11 | அரவிந்தன் நர்மிதன் | 11 |
| 12 | ஈஸ்வரன் கேசவன் | 12 |
| 13 | முகுந்தன் விந்தனா | 13 |
| 14 | யுகதீபன் பிரதிஸ்கா | 14 |
| 15 | செந்திரகுமார் சனுசிகா | 15 |
| 16 | கோகுலன் நாவரசன் | 16 |
| 17 | குலேந்திரன் அருநிலா | 17 |
| 18 | லோகேஸ்வரன் அலைநிலை | 18 |
| 19 | கலைச்செல்வன் கயலரசி | 19 |
| 20 | யோகநாதன் துளசிகா | 20 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை –2018
## வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | புள்ளி |
|---|---|---|
| 1 | குகபாலன் சுபேசனா | 189 |
| 2 | லோகேஸ்வரன் சாதுரியன் | 185 |
| 3 | யுகதீபன் பிரதிஸ்கா | 182 |
| 4 | பிறேம்குமார் கனியிசை | 180 |
| 5 | ஸ்ரீறங்கநாதன் மதுரிகா | 176 |
| 6 | ஜெயரூபன் அட்சரா | 174 |
| 7 | இரத்தினசிங்கம் ஜென்சிகா | 172 |
| 8 | முகுந்தன் விந்தனா | 172 |
| 9 | சிவகுமார் சிந்துஷான் | 170 |
| 10 | சாந்தகுமார் நிசான் | 165 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வகுப்பாசிரியருடன் தரம் 5-A மாணவர்கள்



## வகுப்பாசிரியருடன் தரம் 5-B மாணவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் - 05 புலமைப்பரிசில் பரீட்சை -2018
# வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்


குகபாலன் சுபேசனா- 189


லோகேஸ்வரன் சாதுரியன் -185


யுகதீபன் பிரதிக்ஷா -182


பிறேம்குமார் கனியிசை- 180


ஸ்ரீரங்கநாதன் மதுரிகா -176


ஜெயரூபன் அட்சரா -174


இரத்தினசிங்கம் ஜென்சிகா -172


முகுந்தன் விந்தனா -172


சிவகுமார் சிந்துஷான் -170


சாந்தகுமார் நிஷான் - 165

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தரம் – 5 புலமைப்பரிசில் பரீட்சை –2018
## 100 புள்ளிக்கு மேல் பெற்ற மாணவர்கள்

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | அரவிந்தன் நர்மிதன் | 162 |
| 2 | சிவகுமார் பிரனுஜன் | 161 |
| 3 | அருள்ராசா அபிஷன் | 161 |
| 4 | குலேந்திரன் அருள்நிலா | 160 |
| 5 | ஸ்ரீதரன் ரிந்துஷன் | 159 |
| 6 | கலைச்செல்வன் கலையரசி | 157 |
| 7 | பிரபாகரன் சாதுரி | 157 |
| 8 | கோகுலன் நாவரசன் | 153 |
| 9 | குணாகரன் லக்சவி | 152 |
| 10 | ஈஸ்வரன் கேசவன் | 151 |
| 11 | ஜெயராஜிதன் திருவாணன் | 145 |
| 12 | சதிஸ் சஞ்சய் | 145 |
| 13 | பாஸ்கரன் சஞ்சீவன் | 145 |
| 14 | லோகேஸ்வரன் அலைநிலா | 144 |
| 15 | சுரேஸ்குமார் மிதுனா | 144 |
| 16 | அகிலேஸ்வரன் அபிசாந் | 142 |
| 17 | பிரபாகரன் மிதுசிகன் | 140 |
| 18 | நந்தகுமார் வானதி | 139 |
| 19 | நேரராசா யதுர்சிகா | 137 |
| 20 | சூரியகுமார் யதுசன் | 137 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| 21 | விஜயமோகன் சங்கிதா | 132 |
| 22 | கணேசலிங்கம் ஆருதி | 132 |
| 23 | மோகனகுமார் வினோஜா | 130 |
| 24 | சிசேந்திரகுமார் சனுசிகா | 128 |
| 25 | ஜெயசீலன் அபிதா | 128 |
| 26 | ஜெயக்குமார் சமர்வாணன் | 124 |
| 27 | மெய்யழகன் சூசியந்தன் | 124 |
| 28 | அருள்தாஸ் லக்சனா | 124 |
| 29 | லோகநாதன் அபிசனா | 120 |
| 30 | இராகுலன் பிரிந்தா | 119 |
| 31 | தீபன் துவாரகன் | 116 |
| 32 | செல்வகுமார் கயல்விழி | 114 |
| 33 | சுரேஸ் ரூபினி | 113 |
| 34 | ஜெயசீலன் அகநயன் | 112 |
| 35 | பிரபாகரன் பிரணவன் | 111 |
| 36 | இஜேஸ்வரன் ஐந்துஜன் | 111 |
| 37 | புஸ்பராஸ் தமிழ்வாணி | 102 |
| 38 | இந்திரகுமார் யதுசன் | 102 |
| 39 | யோகநாதன் துளசிகா | 102 |
| 40 | இராயு தேன்நிலவன் | 101 |
| 41 | செல்வம் செந்தூரன் | 101 |

**70-99 வரையான புள்ளிகள் பெற்றோர்**

| | | |
|---|---|---|
| 1 | திருமங்ளேஸ்வரன் புரட்சிமாறன் | 98 |
| 2 | சிவஞ்ஞானம் கலைக்குமரன் | 97 |
| 3 | சந்திரகுமார் கவிதா | 95 |
| 4 | கமலநாதன் டினோசா | 93 |
| 5 | செல்வநாதன் கயல்விழி | 92 |
| 6 | ஜெயறஞ்சன் தமிழ் மதி | 91 |
| 7 | நிறைஞ்சன் அரங்கன் | 81 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாணி விழா போட்டி விபரம்

### தரம் – 1 கோலப்போட்டி ( தேங்காய்ப்பூ )

| | |
|---|---|
| ஸ்ரீ. சுதர்சா | 1 |
| லோ.ரிசோபன் | 2 |
| ஜெ.கஜீபன் | 3 |
| சி. கேசவி | 4 |
| கு.டக்ஷஜா | 5 |

### தரம் – 2 கோலப்போட்டி ( தானியக்கோலம்)

| | |
|---|---|
| ஜெ.தக்சனா | 1 |
| ற. சம்யுக்தன் | 2 |
| சூ. திகானி | 3 |
| மா.கலைமதி | 4 |
| சு.கம்சிகன் | 5 |
| அ.நயனிகா | 5 |

### தரம் – 3 தோரணம் ( மங்கலம் )

| | |
|---|---|
| ஸ்ரீ.சர்சிகா | 1 |
| ச.கபிசன் | 2 |
| சு.அபிசேச | 3 |
| ஜொ.கோபிக்சன் | 4 |
| கி.புருசோத் | 5 |

### தரம் – 4 சரம்கட்டுதல்

| | |
|---|---|
| ஜெ.ஆரணி | 1 |
| நே.தேனுஷா | 2 |
| து.தர்சிகா | 3 |
| கோ.துஷாளினி | 4 |
| சி.மாதுளன் | 5 |

### தரம் – 5 மாலைகட்டுதல்

| | |
|---|---|
| பி.கனியிசை | 1 |
| கு.அருநிலா | 2 |
| ஜெ.அட்சரா | 3 |
| கு.லக்சவி | 4 |
| லோ.அலைநிலா | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருக்குறள் மனனப் போட்டியில் வெற்றி பெற்றோர் விபரம் – 2018

| தரம் | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | சி.கேசவி | 1 |
| | ப.தரணிகன் | 2 |
| | கு.டக்ஷஜா | 3 |
| | ச.உமாருதிகா | 4 |
| | லோ.ரிசோபான் | 5 |
| 2 | சு.கம்சிகன் | 1 |
| | ம.கவின் | 2 |
| | ச.விபிஷா | 3 |
| | யூ.அபிநிசன் | 4 |
| | கு.திகாணி | 5 |
| 3 | யூ.அக்ஷயன் | 1 |
| | சி.சபரிகரன் | 2 |
| | சு.அபிசேக் | 3 |
| | சி.அபிசனா | 4 |
| | ச.ஹபிஷன் | 5 |
| 4 | ஜெ.ஆரணி | 1 |
| | ச.சனுசியா | 2 |
| | து.தர்சிகா | 3 |
| | ந.அனுரதன் | 4 |
| | கோ. துசாளினி | 5 |
| 5 | இ.ஜென்சிகா | 1 |
| | ஜெ.அட்சரா | 2 |
| | கு.சுபேசனா | 3 |
| | ஜெ.திருவாணன் | 4 |
| | கு.லக்சவி | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வாணி விழா நிகழ்வின் போது....



ஒளி விழா நிகழ்வின் போது....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேடம் புனைதல் போட்டி – 2018
## முடிவுகள்

| தரம் | மாணவர் பெயர் | நிலை |
|---|---|---|
| 1 | அ.பிரமினா | 1 |
| | உ.பதுர்சனா | 2 |
| | ஜெ.கஜீவன் | 3 |
| | க.சரண்ஜன் | 4 |
| | லோ.ரிசோபன் | 5 |
| 2 | கு.திகானி | 1 |
| | கி.கிர்த்திகா | 2 |
| | ம.கவின் | 3 |
| | பு.லோசனி | 4 |
| | ச.மேனகன் | 5 |
| 3 | ஜெ.கபிஷன் | 1 |
| | சு.அபிஷேக் | 2 |
| | பி.ரிலக்சிகா | 3 |
| | சி.சபரீகரன் | 4 |
| | ச.ஹபிசன் | 5 |
| 4 | ஜெ.ஆரணி | 1 |
| | மா.தாருமதி | 2 |
| | கரீசன் | 3 |
| | சு.தஸ்மிகா | 4 |
| | ந.அனுரதன் | 5 |
| 5 | ந.வானதி | 1 |
| | அ.அபிசன் | 2 |
| | பி.கனியிசை | 3 |
| | கு.அருநிலா | 4 |
| | மு.விந்தனா | 5 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இணைப்பாட விதான போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர் விபரம்

| தொ. இல | மாணவர் முழுப் பெயர் | தரம் | போட்டியின் பெயர் | கோட்டம் | வலயம் | மாகாணம் |
|---|---|---|---|---|---|---|
| | கிருபாலன் புருசோத் | 3B | சித்திரப்போட்டி | 1 | 1 | |
| | ஜெயக்குமார் தக்சனா | 2B | ஒட்டுச் சித்திரம் | " | " | |
| | ஜெயகாந் ஆரணி | 4A | விரைவு கணிதம் | 1 | 2 | |
| | கோணேஸ் துசாளினி | 4A | சதுரங்கம் | 3 | | |
| | குணாகரன் லக்சவி | 5B | சதுரங்கம் | 4 | | |

## கல்வி கண்காட்சியில் பரிசு பெற்றோர் விபரம்

### தமிழ்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | அ. நர்மிதன் | தரம் - 5 |
| 2 இடம் | உ.பதுர்சன் | தரம் - 1 B |
| 3 இடம் | சு.கம்சிகன் | தரம் 2 A |

### கணிதம்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | றெ.சுவர்சி | தரம் - 2 A |
| 2 இடம் | அ.நயனிகா | தரம் 2 B |
| 3 இடம் | க.தரணிதன் | தரம் 1 A |

### இந்துசமயம்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | கி.புருசோத் | தரம் - 3 |
| 2 இடம் | க.சியாந்தி | தரம் - 2 A |
| 3 இடம் | கு.டக்ஷயா | தரம் 1 B |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கல்விக் கண்காட்சி நிகழ்வின் போது....



சிறுவர், முதியோர் தின நிகழ்வின் போது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### கிறிஸ்த்தவம்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | டிறோனிஸ் | தரம் - 4 A |
| 2 இடம் | ஜெ.அகநயன் | தரம் - 5 B |
| 3 இடம் | மிதுனா | தரம் 5 B |

### சிங்களம்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | கோ.துசாளினி | தரம் - 4 A |
| 2 இடம் | மெ.துஸ்யந்தன் | தரம் - 5 A |
| 3 இடம் | ஜெ.ஆரணி | தரம் 4 A |

### ஆங்கிலம்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | ஜெ.கார்ணிகா | தரம் - 1 B |
| 2 இடம் | கு.லக்சவி தரம் | 5 B |
| 3 இடம் | ஜெ.திருவாணன் | தரம் 5 |

### கணினி

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | ஜெ.திருவாணன் | தரம் - 5 A |
| 2 இடம் | அ.அபிஷன் | தரம் - 5 B |
| 3 இடம் | லோ.அலை நிலா | தரம் - 5A |

### சுற்றாடல்சார் செயற்பாடு

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | கு.அருநிலா | தரம் - 5 |
| 2 இடம் | லோ.அலைநிலா | தரம் - 5 A |
| 3 இடம் | சி.மாதுளன் | தரம் 4A |
| 4. இடம் | கோ.இன்பரசன் | தரம்- 2 |
| 5. இடம் | மு. விந்தனா | தரம் - 5 A |
| 5. இடம் | கி.புருசோத் | தரம் - 3 B |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆக்கம்

| இடம் | பெயர் | தரம் |
|---|---|---|
| 1 இடம் | பா.அபினா | தரம் - 2 A |
| 2 இடம் | சு.கம்சிகன் | தரம் - 2 B |
| 3 இடம் | மேரியஸ் மிதா | தரம் 2 B |
| 4. இடம் | சு. லதுஷிகா | தரம்- 2 B |
| 5. இடம் | லோ.ரிசோபன் | தரம் - 1 A |
| 5. இடம் | மா. தாருமதி | தரம் - 4 A |

### எமது மாணவர்களுக்கு துவிச்சக்கர வண்டி வழங்கியோர்

| இல | பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 01. | பே. ஜெயகரன் (லண்டன்) | 04 |
| 02. | த.பேரரசன் (பிரான்ஸ்) | 02 |
| 03. | செ.செல்வநாதன் (பிரான்ஸ்) | 02 |
| 04. | த.குருகுலராஜா (கௌரவ முன்னாள் மாகாணசபை உறுப்பினர்) | 02 |

### கற்றலுக்காக மாணவர்களுக்குப் பணம் வழங்கிக் கொண்டிருப்போர்.

| இல | பெயர் | எண்ணிக்கை | தொகை |
|---|---|---|---|
| 1. | றஜீபன் வைத்தியர் | 3 | 3000/= |
| 2. | க.சுதர்சன் | 1 | 3000/= |
| 3. | க.முருகவேல் | 1 | 2000/= |
| 4. | றொட்டறிக்கழகம் | 2 | 1000/= |
| 5. | க.சிவகுமார் | 3 | 6000/= |
| 6. | தி.நந்தினி | 2 | 2000/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாண்ட் வாத்திய அணி அங்குரார்ப்பணம்



கல்விச் சுற்றுலாவின் போது......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கியோர் விபரம்

| இல | பெயர் | பொருள் | தொகை | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | றோட்டறிக் கழகம் | சப்பாத்து சீருடை | 1500/= | 3 |
| 2. | றோட்டறிக் கழகம் | கொப்பி, பென்சில் கொம்பாஸ் | 1500/= | 15 |
| 3. | திருமதி. பரமநாதன | புத்தகப்பை பென்சில் | 715/= | 07 |
| 4. | முருகையா (டென்மார்க்) ஒழுங்கமைப்பு இ.ராஜன் | புத்தகப்பை கொப்பிகள் | 1500/= | 10 |

## 2018 இல் கிடைக்கப் பெற்ற அன்பளிப்புக்கள்

| | |
|---|---|
| தரம் 5 பெற்றோர் ( 2017) | அலுமாரி |
| தரம் 4 A, B பெற்றோர். | அலுமாரி, நிலவிரிப்பு கேட்டின் சீலை சுவாமி படம, கால் மிதி, வகுப்பறைக்கான பெயின்ட் |
| தரம் 4 B பெற்றோர் | அலுமாரி |
| தரம் 5 A பெற்றோர் | நிலவிரிப்பு, கேட்டின் சீலை, படம் |
| தரம் -3 பெற்றோர் | கேட்டின் சீலை, படம், நிலவிரிப்பு பாதனி இறாக்கை 2 |

## கணினி மற்றும் சிங்கள ஆசிரியர்களுக்கான கொடுப்பணவு வழங்கியோர்.

| பெயர் | தொகை |
|---|---|
| திருமதி. சு. சுதாகரன் | 50000/= |
| திரு. நந்தகுமார் | 5000/= |
| திரு. வே. நகுலநந்தன் | 69000/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திறன் வகுப்பறைகளுக்கான அனுசரணை வழங்கியோர்

| இல | பெயர் | நாடு |
|---|---|---|
| 1 | பன்னீர்ச் செல்வம் சிவநிதி | சுவிஸ் |
| 2 | விநாயகமூர்த்தி கோமளா | கனடா |
| 3 | சுதாகரன் சுகுணா | லண்டன் |
| 4 | கோகுலன் பாமினி | வட்டக்கச்சி |
| 5 | IMHO | கனடா |
| 6 | தி. நவநீதராசா | ஜேர்மன் |

## கணினிகள் அன்பளிப்பு

| | | |
|---|---|---|
| 1 | Care for Education | 13 Lap top , Internet Net work |
| 2 | Vaddakkachchi Center College | 10 Computer |
| 3 | Nakulananthan | 20 Tap Let, 20 Tembet, 20cover |

## SJC 87 Intiative

| | |
|---|---|
| ஒலிபெருக்கி சாதனத் தொகுதி | 136,000/= |
| வேலி அடைத்தல் | 113,500/= |
| கணினி ஆசிரியருக்கான சம்பளம் மாதாந்தம் | 10,000/= |
| பரிசளிப்பு விழாவுக்கு அன்பளிப்பு | 25,000/= |
| தரம் -5 புலமைப் பரிசில் விசேட வகுப்பு அனுசரணை | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஏனைய அனுசரணையாளர்கள்

| இல | பெயர் | உதவி | தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.க.முருகவேல் (ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர்) | 10 பிளாஸ்டிக் மேசை | 32000/= |
| 2 | காவேரிகலாமன்றம், வன்னிக்கோப் (அவுஸ்திரேலியா) | CCT Camara | 134000/= |
| 3 | திருமதி. ஜெயநிதி - சுவிஸ் | 2 சீமெந்து கதிரை | 10000/= |
| 4 | 1993,O/L 1996 A/L பழையமாணவர்கள் | பான்ட் வாத்தியம், சீருடை | - |
| 5 | SDC நிர்வாகக்குழு | புல் வெட்டும் இயந்திரம் | 13000/= |
| 6 | கோபாலகிருஸ்ணன் அகிலன் பவுன்டேசன் | கணினி மேசை , கதிரை | 126000/= |
| 7 | றொட்டறிக் கழகம் | மூக்குக்கண்ணாடி | 3200/= |
| 8 | திரு.க.கோபாலசிங்கம் | சரஸ்வதி சிலை அமைப்பு | - |

**எமது பாடசாலையில் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்த மாணவர்களின் விபரம் – 2018**


| இல | மாணவர் முழுப் பெயர் | பெற்ற புள்ளி | மாவட்ட நிலை |
|---|---|---|---|
| 01 | குகபாலன் சுபேனா | 189 | 13 |
| 02 | லோகேஸ்வரன் சாதுரியன் | 185 | 22 |
| 03 | யுகதீபன் பிரதிஸ்கா | 182 | 40 |
| 04 | பிறேம்குமார் கனியிசை | 180 | 50 |
| 05 | ஸ்ரீரங்கநாதன் மதுரிகா | 176 | 95 |
| 06 | ஜெயரூபன் அட்சரா | 174 | 121 |
| 07 | இரத்தினசிங்கம் ஜென்சிகா | 172 | 147 |
| 08 | முகுந்தன் விந்தனா | 172 | 147 |
| 09 | சிவகுமார் சிந்துஷான் | 170 | 175 |
| 10 | சாந்தகுமார் நிசான் | 165 | 252 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### தரம் 5 புலமைப்பரிசில் ஆண்டு ரீதியான பகுப்பாய்வுகள் 2013 – 2018

| விபரம் | ஆண்டுகள் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | 2013 | 2014 | 2015 | 2016 | 2017 | 2018 |
| விண்ணப்பித்தோர் தொகை | 47 | 52 | 39 | 49 | 50 | 60 |
| தோற்றியோர் தொகை | 45 | 51 | 39 | 49 | 50 | 60 |
| வெட்டுப்புள்ளிக்கு மேல் பெற்று சித்தியடைந்தோர் | 08 | 06 | 03 | 07 | 06 | 10 |
| 100 புள்ளிக்கு மேல் சித்தியடைந்தோர் | 25 | 29 | 16 | 26 | 28 | 51 |
| 70 புள்ளிக்கு மேல் சித்தியடைந்தோர் | 36 | 45 | 29 | 44 | 46 | 58 |
| சித்தி வீதம் | **80%** | **88%** | **74%** | **90%** | **92%** | **97%** |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரம் 5 புலமைப்பரிசில்
# பரீட்சை புள்ளிப் பகுப்பாய்வு

| வகுப்பாயிடை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|
| 40-69 | 02 |
| 70-99 | 07 |
| 100-149 | 31 |
| 150-200 | 20 |







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2018 ம் ஆண்டிற்கான சிறந்த முதன்மை மாணவர்கள்

## புலமைப்பரிசில் பாடசாலை மட்ட முதல்நிலை மாணவி



செல்வி.குகபாலன் சுபேசனா

## பல்துறை திறமை சார்முதன்மை மாணவன்



செல்வன்.லோகேஸ்வரன் சாதுரியன்

## பல்துறை திறமை சார்முதன்மை மாணவி



செல்வி. புஸ்பராஸ் தமிழ்வாணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை அபிவிருத்திக் குழுவினர்



**தரம் -05 புலமைப் பரிசில் பரீட்சை 2017 வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்ற எமது மாணவர்கள்**



கி.சாரங்கி -179



லி.சங்கிசை -171



வி.நிர்மலன் -168



பு.துஷ்யந்தன் -163



நா.யிவிசன் -161



ஜெ.திருவருவி -156

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நினைவுப் பரிசில்கள்
## தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சை முதன் நிலை மாணவருக்கு அமரர் பொன் சபாபதி நினைவுப்பரிசு

கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரியில் ஆசிரியராகப் பணியேற்று கிளி/வட்டக்கச்சி.ம.வி யில் புகழ்பூத்த அதிபராக 01.04.1978 தொடக்கம் 18.10.1984 வரையும் பின்னர் கிளி/இந்துக்கல்லூரியின் அதிபராகவும், கோட்டக்கல்விப் பணிப்பாளராகவும், பிரதிக் கல்விப் பணிப்பாளராகவும் பின்னர் கிளிநொச்சி மாவட்ட வலயக் கல்விப் பணிப்பாளராகவும் இருந்து மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். எமது மாவட்டத்தின் கல்வி வரலாற்றில் இவரது காலப் பணி இன்னும் பெயர் சொல்லி பெருமைப்படும் நிலையில் அழியாததொன்றாக இருப்பது மனம் கொள்ளத்தக்கது.

அனுசரணையாளர்
அமரர் பொன் சபாபதி அவர்களின் மாணவருள் ஒருவர்
திரு.செல்வராசா கிருபாகரன் - ஜேர்மனி
(பழைய மாணவன் - கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி )



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பல்துறை திறமைசார் முதன்மை மாணவிக்கு அமரர் சிவயோகம் பத்மநாதன் (சிவயோகம் ரீச்சர்) நினைவுப் பரிசு

கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியில் ஆரம்பக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றியவர். எண்ணும் எழுத்தும் கண்ணெனஎண்ணி எமது கிராமத்து மாணவர்களுக்கு நல்ல ஆரம்பக் கல்வியை புகட்டியவர். சிறுபிள்ளைகளை தன் அன்பாலும் அரவணைப்பாலும் ஈர்ந்து கல்வி புகட்டியவர். வலக்கையாலும், இடக்கையாலும் அழகுற எழுதும் ஆற்றல் கொண்டவர். சிறு வயதிலேயே எழுத்துப் பிழையின்றி மாணவர் எழுதவும் வாசிக்கவும் பெரும் வழிகாட்டிய இவரது அன்புக்கு அடிபணியாத மாணவரே இருந்ததில்லை, இவரது அழகிய எழுத்து காரணமாக நிர்வாகத்தில் இவரது பங்கு அதிகமாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. இறுதியில் பிரதி அதிபராக பணியாற்றி ஓய்வு பெற்றவர்.

அனுசரணையாளர்
அமரர் சிவயோகம் பத்மநாதன் அவர்களின் மகள்
திருமதி ஶ்ரீவாணி திலீபன்
(பழைய மாணவி)
ஆசிரியர் கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பல்துறை திறமைசார் முதன்மை மாணவனுக்கு அமரர் சிதம்பரப்பிள்ளை இராசரத்தினம் (புலவர்) நினைவுப் பரிசு

கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க பாடசாலையின் ஆசிரியராகப் பணியாற்றி 1984.05.22 தொடக்கம் 1993.05.22 வரை கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றியவர். தமிழையும் சைவ சமயத்தையும் மாணவர்களுக்கு கற்பித்து நற்பிரஜைகள் உருவாவதற்கு வழி சமைத்தவர். மிகுந்த பேச்சாற்றல் எழுத்தாற்றல் கொண்ட இவரால் இத்துறை சார்ந்த மாணவர்கள் பலரை உருவாக்க முடிந்தது. அவரது தமிழ்ப் புலமை காரணமாக புலவர் சேர் என எல்லோராலும் அன்பாக அழைக்கப்பட்டவர். எமது ஊரில் இவரின் பணி போற்றுதற்குரியது.

அனுசரணையாளர்
அமரர் சி.இராசரத்தினம் (புலவர்) அவர்களின் மகள்
திருமதி ராதா சிவகுமார் (பழைய மாணவி)
ஆசிரியர் கிளி/வட்டக்கச்சி மத்திய கல்லூரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி உரை

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவை சிறந்த முறையில் நடாத்துவதற்கு எமக்கு ஆதரவு தந்த அன்பு உள்ளங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் நிறைவடைகின்றோம். குறிப்பாக இந்த விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து எம்மை உற்சாகப்படுத்திய வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் திரு. சிவலிங்கம் சத்தியசீலன் அவர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த வலயக்கல்விப் பணிப்பாளர் திரு.திருஞானம் ஜோண்குயின்டஸ் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் கௌரவ விருந்தினராக கலந்து சிறப்பித்த பழைய மாணவனும், கிளிநொச்சி இந்துக்கல்லூரி முதல்வருமாகி திரு. கிருஸ்ணப்பிள்ளை விக்னராஜா அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள்.

இவ்விழாவினை முன்னெடுப்பதற்கு நிதி ஆதரவு தந்த புலம்பெயர் நாட்டில் வசிக்கும் பழைய மாணவர்கள் ஏனைய பழைய மாணவர்கள் இந்த விழாவினை நல்ல முறையில் நடாத்தி முடிப்பதற்கு ஆதரவு தந்த பாடசாலை அபிவிருத்திக்குழு, பெற்றோர்கள் அனைவருக்கும் நன்றிகள்.

இவ்விழாவின் நிறைவாக மலர் ஒன்றினை சிறந்த முறையில் வெளியிடுவதற்கு புகைப்படங்களை எடுத்து வழங்கிய சங்கர் புகைப்பட கலையகத்தினருக்கும் மலரினை அழகுற அச்சிட்டு வழங்கிய வேழன் பதிப்பகத்தினருக்கும் ஒலி,ஒளி அமைப்பினை வழங்கிய திலக்ஷன் சவுண்ட் நிறுவனத்தினருக்கும் நினைவுப் பரிசில்களை வழங்கிய அன்பு உள்ளங்களுக்கும் கலை நிகழ்வுகளைப் பழக்கிய செல்வி.அனு அவர்களுக்கும் நன்றிகள் ஈற்றில் விழா சிறக்க ஆதரவு தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

நன்றி


**பரிசளிப்பு விழா,**
**ஒழுங்கமைப்புக்குழு.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பரிசளிப்பு விழாவிற்கு நிதி வழங்கிய பழைய மாணவர்கள் / நலன்விரும்பிகள்**

| இல | பெயர் | இடம் | தொகை |
|---|---|---|---|
| 01 | திரு. கிருஸ்ணபிள்ளை உதயகுமார் | சுவிஸ் | 55000.00 |
| 02 | திரு.தங்கராசா ஜெயசீலன் (குட்டி) | பிரான்ஸ் | 50000.00 |
| 03 | திரு. கந்தையா லோகநாதன் | பிரான்ஸ் | 30000.00 |
| 04 | திரு.பவானந்தன் தவமணி | வட்டக்கச்சி | 30000.00 |
| 05 | SJC 87 Initiative | கனடா | 25000.00 |
| 06 | திரு. பேரம்பலம் ஜெயாகரன் | லண்டன் | 20000.00 |
| 07 | திரு.தில்லைராசா மோகன் | லண்டன் | 20000.00 |
| 08 | திரு.தர்மலிங்கம் பேரரசன் | பிரான்ஸ் | 20000.00 |
| 09 | திரு.சிவசிதம்பரம் சிவகரன் | லண்டன் | 10000.00 |
| 10 | திரு.சுப்பிரமணியம் குகதாசன் | கிளிநொச்சி | 10000.00 |
| 11 | திரு. திருஞானசம்பந்தர் கஜலோகன் | வட்டக்கச்சி | 10000.00 |





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிளி / வட்டக்கச்சி ஆரம்ப வித்தியாலய பரிசளிப்பு விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்.


# சரவணபவன்

உயர்தர சைவ உணவகம்

*Saravanapavan Vegetarian Restaurant*

திருநகர் வீதி,
பிரதேச சபை முன்பாக
கிளிநொச்சி.

*Thirunagar Road,
Opposite Piradesa shaba
Kilinochchi.*

Tel: 077 5230 064



# KAYAL Canteen





*T.P: 077 7799985*

Faculty of Agriculture,
Kilinochchi Premises,
University of Jaffna.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வேழன் பதிப்பகம், கிளிநொச்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org